[1974 ஏப்ரல் 11

MR. CHAIRMAN : Questions are over.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களுக்கு அவரது 69-வது பிறந்த நாளையொட்டி வாழ்த்துக்கள்.

* திரு. கே. ராஜாராம் : மாண்புமிகு தலைவரவர்களே, இன்று ஒரு மகிழ்ச்சியான தினம். தங்களுக்கு 69-வது பிறந்த தினம்.

THIRU G. VASANTHA PAI : Sir, on a point of order. Yesterday I wanted your leave to move a non-official resolution to felicitate you on your birthday today. No reply was given to me. Now the hon. the Leader of the Opposition is moving and I have no objection. I request the Leader of the Opposition to move the same on behalf of all of us.

THIRU K. RAJARAM : Not only on my behalf but on behalf of my hon. Friend Thiru Vasantha Pai also, I am felicitating the Hon. Chairman.

THIRU G. VASANTHA PAI : The hon. the Leader of the Opposition may move it on behalf of the House.

THIRU K. RAJARAM : For this I have already got the consent of my hon. Friend Thiru Vasantha Pai also in the Chamber of the Hon. Chairman.

ஆகவே தங்களுடைய பிறந்த தினத்தை முன்னிட்டு தங்களுக்கு எங்களுடைய வணக்கத்தையும், பாராட்டையும் தெரிவித்துக்கொள்வதில் இந்தச் சபையில் அங்கத்தினர்கள் ஒருவருக்கொருவர் எவ்வளவு போட்டி போட்டுக்கொள்கிறோம் என்பதை நீங்களே நேரில் அறிந்து கொண்டீர்கள். நாங்கள் உங்களை மகிழ்ச்சியுடன் பாராட்டுகிறோம். நீங்கள் எங்கள் எல்லோரையும் விட மூத்தவர் என்பதால் தான் வாழ்த்துகிறோம் என்ற வார்த்தையைச் சொல்லவில்லை ; எங்களுடைய வணக்கத்தையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறோம். தங்களைப் போன்ற ஒருவர் தலைவராக இருந்து அவையை நடத்துவது என்பது எங்களுக்கு மிகச் சந்தோஷத்தையும் பெருமையையும் கொடுக்கிறது. ஏனென்றால் இந்தியாவில் பல சபைகளில் நடப்பதைப்

1974 ஏப்ரல் 11] [திரு. கே. ராஜாராம்]

பார்த்துக்கொண்டிருக்கிறோம். இந்தச் சட்டசபையிலே எத்தனை மணி நேரம் உட்கார்ந்திருந்தாலும், எங்களுக்குச் சலிப்புத் தட்டுவதில்லை. நீங்கள் இந்த அவையை நடத்தும் விதம் எல்லோரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்துகிறது. நீங்கள் குறுக்கிட்டு எங்களைச் சிரிக்க வைத்து எங்களுக்கு இந்தச் சபையில் ஏற்படக் கூடிய ஸ்ட்ரெயின் தெரியாமல், எல்லோரையும் மகிழ்ச்சியான முறையிலும், பாரபட்சம் இல்லாமலும், எல்லாக் கட்சிகளையும் ஒரே மாதிரியாகவும் நடத்தி வருவது எங்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. இந்தப் பாரம்பரியம் நீண்டு நடைபெற வேண்டுமென்று விரும்புகிறேன். தாங்கள் நீடித்த ஆயுளையும் குறைவற்ற செல்வத்தையும் பெற்று பல்லாண்டுகள் . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர்: செல்வம் இல்லை.

திரு. கே. ராஜாராம்: அதையும் பெற வேண்டும். பெறுவதற்கு எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிய வேண்டுமென்று கூறி, எல்லா உறுப்பினர்கள் சார் பிலும் பாராட்டுதலையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மேலவைத் தலைவரவர்களே, இன்று தங்களுடைய 69 ஆவது பிறந்த நாள் விழாக் கொண்டாடப்படும் சூழ் நிலையில் மேலவை தன்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கின்ற நிலைமை ஏபட்டிருப்பது நமக்கெல்லாம் பெருமை தருகின்ற ஒன்று. அதைத் தான் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். எந்த ஆண்டும் இந்த வாய்ப்பு ஏற்பட்டதில்லை. ஏனென்றால் எந்த ஆண்டும் ஏப்ரல் 2, 3 தேதி யோடு இரண்டு அவைகளும் முடிந்துவிடும். இந்த ஆண்டு தான் ஏப்ரல் 11 ஆம் தேதி வரை நீட்டிக்கொண்டு வருகின்ற சூழ்நிலை ஏற்பட்டதால், தங்கள் பிறந்த நாள் விழாவன்று மேலவை நடைபெறவும், தாங்கள் வீற்றிருப்பதுமான சூழ் நிலை ஏற்பட்டது. இந்த ஆண்டுதான் இந்த வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. சென்ற ஆண்டும், அதற்கு முந்தைய ஆண்டுகளிலும் இந்த வாய்ப்புக் கிடைக்க வில்லை.

நீண்ட நெடுங்காலமாகவே தாங்கள் பொதுத் தொண்டிற்குத் தங்களை ஒப்ப டைத்து, பொதுப்பணி புரிந்து வருவதில் தீவிர கவனம் செலுத்தி வந்திருக்கி றீர்கள். இந்த அவைக்குத் தலைமை தாங்கி தாங்கள் நடத்தி வருகின்ற பாங்கினை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் மேலவை உறுப்பினர்கள் அனைவரின் சார்பாகவும் எடுத்துக் குறிப்பிட்டார்கள். தாங்கள் இன்னும் பல்லாண்டு காலம் வாழ்ந்து, இந்த மேலவை பூரிப்பும், பெருமையும் கொள்ளத் தக்க அளவுக்கும், பெருமிதம் கொள்ளத் தக்க அளவுக்கும் நடத்தி, வேறு பல

மன்றங்களுக்கெல்லாம் எடுத்துக்காட்டாக விளங்கத் தக்க அளவுக்கு வழி நடத்திச் செல்வீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கெல்லாம் உண்டு. அந்த வகையிலே மேன்மேலும் நீங்கள் பல்லாண்டு, பல்லாண்டு வாழவேண்டுமென்று வாழ்த்துவதிலும், நீங்கள் வளம்பல பெற்று நலம் பல எய்தித் திகழ வேண்டு மென்று எண்ணுவதிலும் நாங்கள் அத்துணை பேரும் பூரிப்பும் பெருமையும் கொள்கின்றோம் என்று சொல்லி, எங்கள் உளங்கனிந்த வாழ்த்துக்களை தங்களுக்கு உரிமையாக்கிக் கொள்கிறோம். வணக்கம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இந்த அவையில் கல்வி அமைச்சர் அவர் களும், மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், அவையின் உறுப்பினர் கள் சார்பாக 69 ஆம் ஆண்டு முடிந்த என்னை இன்னும் பல்லாண்டுகள் வாழ வேண்டுமென்று வாழ்த்தியிருக்கிறார்கள். அவர்களுடைய நல் வாழ்த்துக்கள் என்னை மேன்மேலும் இந்த அவையை என்னுடைய சக்திக்கு ஏற்ற அளவுக்கு நடத்திச் செல்ல உதவும். அவர்களுடைய நல்வாழ்த்துக்களை அதற்கு ஒரு அருமருந்தாகக் கொள்கிறேன்.

நான்கு ஆண்டுகளாக தலைவராக இருந்து இந்த அவையை நடத்துகின்ற நான், எனக்கு இருக்கின்ற தனிப்பட்ட கோபங்களை எல்லாம் விட்டுவிட்டு (அவையில் சிரிப்பு), . . . என்னைப்பற்றி நம்முடைய அருமைத் துணைத் தலைவர் அவர்கள் கேள்விப்படுகிறபோது கூட, பெரிய முன்கோபியாக இருப்பவன் போலிருக்கிறதே என்றெல்லாம் நினைத்துக்கொண்டிருந்த எண்ணத்தையெல்லாம் இந்தப் பதவியின் காரணத்தாலோ அல்லது நீங்கள் எல்லாம் தந்த ஒத்துழைப்பின் காரணத்தாலோ அல்லது இந்த அவையில் எங்களை ஆளாக்கி வளர்த்த, கட்சியின் பெயரை, கண்ணியத்தைக் காப்பாற்ற வேண்டுமென்ற காரணத்தாலோ,

"There is no democracy without a rival party; there is no democracy without opposition; a State of the people, by the people, for the people".

என்று சொல்லி ஜனநாயக மரபுக்கு ஏற்ற மாதிரி, நான் வெளியே இருந்த போது எந்தெந்த கட்சிகளை மோசமாகத் தாக்கினேனோ, அதற்குப் பதிலாகவோ என்னவோ, அவர்களை எல்லாம் அணைத்து, . . . இந்த அவையை சீரோடும் சிறப்போடும் நடத்தி வந்திருக்கிறேன். இன்னும் இருக்கின்ற இரண்டு ஆண்டு களில் உங்களுடைய ஒத்துழைப்பு மிக நல்லமுறையில் அமையும் என்று சொல்லி, என்னை வாழ்த்திய உங்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் சொல்லிக்கொள்கிறேன். (அவையில் கையொலி)

TRUTH ALONE TRIUMPHS

3. அறிவிப்புகள்.

பேரவையிலிருந்து செய்திகள்.

MR. CHAIRMAN : I have received a message from the Hon. Speaker, Legislative Assembly. transmitting a copy of the Tamil Nadu Additional Sales Tax (Amendment) Bill, 1974 (L.A. Bill No. 16 of 1974), as passed by the Assembly, and signed by him for the recommendation of the Council and certifying that the Bill is a Money Bill within the meaning of Article 199 of the Constitution of India.

I have also received messages from the Hon. Speaker, Legislative Assembly, transmitting copies of the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Third Amendment Bill, 1974 (L.A. Bill No. 17 of 1974) and the Tamil Nadu District Municipalities (Amendment) Bill, 1974 (L.A. Bill No. 8 of 1974) as passed by the Assembly and signed by him for the concurrence of the Council.

4. கவன ஈர்ப்பு

புதுக்கோட்டை தேவஸ்தான ஊழியர்கள் ஊதிய உயர்வு கிடைக்கவில்லை என்ற அதிருப்தியில் நேரடி நடவடிக்கையில் இறங்கியிருப்பது குறித்து.

*தவத்திரு குன்றக்குடி அடிகளார் : தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து, மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

"புதுக்கோட்டை தேவஸ்தானம் ஊழியர்கள் தங்களுக்கு அரசு அறிவித்த ரூபாய் 10 ஊதிய உயர்வு கிடைக்கவில்லை என்ற அதிருப்தியில் நேரடி நடவடிக்கையில் இறங்கி இருப்பது குறித்து".

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, புதுக்கோட்டை தேவஸ்தானங்களின் ஆளுகையில் 117 கோயில்கள் உள்ளன. இவற்றில் மொத்தம் 850 ஊழியர்கள் பணியாற்றி வருகிறார்கள். இவர்களில் 700 ஊழியர்கள் ஊழிய நிலங்களை அனுபவித்து வருவதோடு ரொக்கச் சம்பளமும் பெற்று வருகிறார்கள். திருக்கோகர்ணம் கோயிலில் மட்டும் 159 ஊழியர்கள்